# திருக்குறள்

1. இன்சொல் இனிதீன்றல் காண்பான்  எவன்கொலோ
   வன்சொல் வழங்கு வது.

2. பணிவுடையன் இன்சொல்லன் ஆதல் ஒருவற்கு
   அணியல்ல மற்றுப் பிற.

3. இனிய உளவாக இன்னாத கூறல்
   கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.

4. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
   பிற்பகல் தாமே வரும்.

5. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
   நன்னயம் செய்து விடல்.